**<u>செய்தி வெளியீடு எண்.550</u>** **<u>நாள்.27.8.2009</u>**

<u>செய்தி வெளியீடு</u>

<u>சென்னை மாநகர பொதுவிநியோகத்திட்டச் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வு</u>

சென்னை மாநகர பொதுவிநியோகத்திட்டச் செயல்பாடுகள் குறித்து இன்று (27.08.2009) மாலை 4.30 மணிக்கு தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழக, மண்டல மேலாளர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் பங்கு பெற்றனர். கடந்த ஒரு வார காலமாக கூட்டுறவுத் துறையில் 20 சிறப்புக் குழுக்கள் மூலமும், நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 33 சிறப்புக் குழுக்களும் தொடர்ந்து 443 கடைகள் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. கடைகள் திறக்கப்படாமல் இருந்தது, இருப்புக் குறைவு போன்ற பல குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு 11 பணியாளர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

ஆய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், நியாயவிலைக் கடைகளில் ஆய்வு மேற்கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. சென்னை வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களுக்கு தனித்தனியாக ஒவ்வொரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆணையர் அலுவலகத்திலுள்ள இரண்டு சிறப்புக் குழுக்கள் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து கடைகளிலும் ஆய்வு செய்ய துவங்கியுள்ளனர். இந்த சிறப்புக் குழுக்களின் பணி 26.08.2009 முதல் துவங்கப்பட்டுள்ளது. இக்குழுவினரால் தினந்தோறும் ஒரு வட்டத்தில் 20 கடைகளை ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்தார். அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு வழித்தடம் (Route Chart) ஆண்டிற்கு ஒருமுறை துணை ஆணையர்களிடம் ஒப்புதல் பெறவேண்டும் என்றும் தமிழ் நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் கூட்டுறவு இணைப் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் ஆகியோர் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்றும் ஆணையிட்டார்கள். மின்னனு தராசு பழுதடைந்தால் அதனை உடனடியாக மாற்றித்தரவோ பழுதுநீக்கவோ இணைப் பதிவாளர்களும், மண்டல மேலாளர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் உதவி ஆணையர் ஒவ்வொரு மாதமும் 3ஆம் தேதிக்குள் ஒதுக்கீட்டு ஆணையை அனுப்பவேண்டும். விண்ணப்பித்த 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டும் என்றும் 2000

குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளை உடனடியாக இரண்டாக பிரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். மாதாமாதம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பெறப்படும் மனுக்களை உடனுக்குடன் தீர்வு செய்ய வேண்டும் என்றும் சிறப்பு பொது விநியோக திட்டத்திற்குரிய பொருட்களை தேவைக்கேற்ப இருப்பு வைத்திருக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள். மண்டல இணைப்பதிவாளர்கள் பகுதி நேர கடைகள் கோரிய மனுக்கள் நிலுவையில் இருந்தால் அதனை உடனடியாக தீர்வு செய்யவேண்டும் என்றும் கிடங்குகளில் இருந்து அத்தியாவாசியப் பொருட்களை எடுத்துச் செல்ல முதன்மைச் சங்க பணியாளர்கள் மட்டுமே அனுப்பப்படவேண்டும் என்றும் விற்பனையாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். மண்டல மேலாளர்கள் ஒதுக்கீட்டு ஆணையின் படி நியாயவிலைக் கடைகள் தோறும் வழங்கல் நமுனா (Issue Memo) போடப்படுகிறதா என்பதை கண்காணிக்கவேண்டும் என்றும் கிடங்குகளில் கணினிகளை இயக்க பணியாளர்களுக்கு உரிய பயிற்ச்சி அளிக்கவேண்டும் என்றும் வழித் தடம் (Route Chart) எழுதப்பட்ட லாரிகளில் தான் பொருட்கள் ஏற்றி அனுப்பப்படுகிறதா என்பதை கண்காணிக்கப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

அமைச்சர் அவர்களின் தொடக்க உரையை தொடர்ந்து மண்டலந்தோறும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்கள். போலி குடும்ப அட்டைகளை களைய வீடுவீடாக மேற்கொள்ளப்படும் தலத் தணிக்கை பணிகளின் முன்னேற்பாடு நடவடிக்கைகளையும், அத்தியாவசியப் பொருட்கள் சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருட்கள் ஒதுக்கீடு மற்றும் நுகர்வு குறித்தும் இலவச எரிவாயு வழங்கும் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் ரூ. 10,000 க்கு மேல் முறைகேடுகள் புரிந்த பணியாளர்களின் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பாகவும், கடத்தலுக்கு பயன் படுத்தப்பட்ட வாகனங்களின் உரிமங்கள் மற்றும் ஓட்டுநர்களின் உரிமங்கள் ரத்து செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955 பிரிவு 6 ( a ) யின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் நிலுவை தொடர்பாகவும், குடும்ப அட்டைகளில் ஏற்படும் மாற்றங்களை கணினிகளில் பதிவு செய்வது தொடர்பாகவும், ஒரு எரிவாயு வைத்திருக்கும் நுகர்வோர்களுக்கு அரசு மானியமாக ரூ.30/– வழங்கும் பணிகள் குறித்தும், குடும்ப அட்டைகளில் எரிவாயு வைத்திருப்பவர் விவரம் குறித்து முத்திரையிடுதல் தொடர்பாகவும், காவலர் குடும்ப அட்டை வழங்கும் பணி தொடர்பாகவும், உதவி ஆணையர் அலுவலகம் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கு கட்டிடங்கள் கட்ட இடம் தேர்வு செய்வது குறித்தும் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கினார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. கா. ராஜாராமன், இ.ஆ.ப.,

ஆணையாளர், உணவுபொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு கே. விர சண்முக மணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் ஆகியோர் உடனிருந்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9